உ
ஓம்.

லெட்சுமிபுரம்
சொக்கலிங்கவித்தியாசாலை
இருபத்தொன்றாவது ஆண்டு
அறிக்கை.

THE CHOKKALINGA VIDYASALA * LAKSHMIPURAM *

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு. — குறள்.

1948

பாண்டியன் பிரஸ்,

அமராவதிபுதூர்

TWENTY FIRST

ANNUAL REPORT

of the

Chokkalinga Vidyasala

(Established on 6-3-1927)


1947 - 48

Address

LAKSHMIPURAM

(KANADUKATHAN)
RAMNAD Dt.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் —குறள்.



N. S. AR. ARUNACHALAN CHETTIAR.
FOUNDER & MANAGER OF THE CHOKKALINGA VIDYASALA.

91/1

உ

சிவமயம்

லெட்சுமிபுரம்
சொக்கலிங்க வித்தியாசாலை
இருபத்தொன்றாவதாண்டு
அறிக்கை

இறை வணக்கம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

கலைமகள் புகழ்

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்

(பாரதியார்)

அன்பு கெழுமிய அவைத்தலைவர் அவர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!

இவ்வித்தியாசாலையின் இருபத்தோன்றுவது ஆண்டு அறிக்கையை இங்கு வாசிக்கின்றேன். இன்ப அன்பு வடிவினனான, எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இக்கல்வி நிலையம் சொக்கலிங்க வித்தியாசாலை என்ற பெயருடன் அட்சய ஆண்டு மாசித்திங்கள் 23-ம்நாள் (6-3-1927) நிறுவப்பட்டு இன்றைக்கு 21 ஆண்டுகள் நிறைவெய்தி 22 வது ஆண்டு ஆரம்பிக்கின்றது.

நோக்கம்

இக்கல்விச்சாலையின் நோக்கம் சிறுவர், சிறுமியர்க்கு ஆரம்பக் கல்வியினை இலவசமாகப் புகட்டி, தமிழ்மொழிப் பயிற்சி, விரிவுரை வன்மை, பொது அறிவு, உடலோம்பல், நல்லொழுக்கம், கூட்டுறவு, நாட்டுப்பற்று, கைத்தொழிற்றிறன், திருவருள் நெறிவாழ்க்கை முதலிய நலன்களைப் பெறச் செய்வதேயாகும்.

கல்வி முறை

தமிழ், கணக்கு, பூகோளம், சரித்திரம், சுகாதாரம், ஸிவிக்ஸ், பாட்டு, பேச்சு, நடிப்பு ஆகிய பாடங்களும், தேவாரம், திருப்புகழ், திருவாசகம் கும்மி கோலாட்டம், நூல் நூற்றல் முதலியவைகளும், நன்கு கற்பிக்கப்படுகின்றன.

நூல் நிலையம்

ஆசிரியர், மாணவர் நூல் நிலையத்தில் கல்வி சம்பந்தமான புத்தகங்கள் 1464 உள்ளன.

ஆசிரிய - ஆசிரியைகள்

திரு. M. இராமாநுஜம் பிள்ளை—
தலைமையாசிரியர்
Secondary grade T. T. C.

திரு. K. R. சுப்பையா—
Higher Ele-grade T. T. C.

திரு. P. K. ரங்கநாதன்—
S. S. L. C.

திருமதி S. சாவித்திரி—
Higher Ele-grade T. T. C

திருமதி S. ஜண்பகம்—
Lower Ele-grade T. T. C

ஆசிரியர்-மாணவர்

ஆண்டு	ஆசிரியர்கள்	வகுப்புகள்	மாணவர்கள்	
			ஆண்	பெண்
முதலாவது ஆண்டு	2	3	51	24
இரண்டாவது ,,	3	4	72	43
மூன்றுவது ,,	4	4	48	30
நான்காவது ,,	4	4	63	27
ஐந்தாவது ,,	3	6	67	37
ஆறுவது ,,	3	6	44	25
ஏழாவது ,,	4	6	91	58
எட்டாவது ,,	3	6	70	44
ஒன்பதாவது ,,	4	6	81	53
பத்தாவது ,,	5	6	83	47
பதினென்றுவது ,,	5	6	78	40
பன்னிரண்டாவது ,,	4	6	85	50
பதின்மூன்றுவது ,,	4	5	67	49
பதினன்காவது ,,	5	5	62	45
பதினைந்தாவது ,,	5	5	65	50
பதினறுவது ,,	5	5	64	54
பதினேழாவது ,,	5	5	64	51
பதினெட்டாவது ,,	5	5	59	57
பத்தொன்பதாவது ,,	5	5	64	51
இருபதாவது ,,	5	5	63	58
இருபத்தொன்றுவது ,,	5	5	65	63

காந்தி வாசகசாலை

இவ்வித்தியாசாலைச் சார்பில் நடைபெற்று வரும் ஷை வாசகசாலைக்கு கீழ்குறிப்பிட்டுள்ள பத்திரிகைகள் வரவழைக்கப்படுகின்றன. பல அன்பர்களும், ஆசிரியர்களும், மேல் வகுப்புப் பிள்ளைகளும் அவற்றைப் படித்துவருகிறார்கள்.

1.	சுதேசமித்திரன்	—	தினப்பதிப்பு
2.	குமரன்	—	வாரப்பதிப்பு
3.	செட்டிநாடு	—	வாரப்பதிப்பு
4.	பாலர் கல்வி	—	மாதப்பதிப்பு
5.	ஞானசம்பந்தம்	—	ஷை
6.	சித்தாந்தம்	—	ஷை
7.	கலை மகள்	—	ஷை
8.	நல்வழி	—	ஷை
9.	**The Hindustan Scout Bulletin** Madras		**Monthly**

பொருட்காட்சிசாலை (*மியூசியம்*)

கல்விப் பயிற்சிக்கு உதவியாய் உள்ள இயற்கைப் பொருள்கள் பலவும், படங்கள், நாணயங்கள், ஸ்டாம்புகள் ஆகியவைகளும், கிண்டர் கார்டன் சாமான்களும் உள்ளன.

உபகரணங்கள்

கிண்டர் கார்டன் பயிற்சிக்குரிய பலவித சாமான்கள், பொம்மைகள், பொருட்பாடப் படங்கள், தேசப்படங்கள், சுகாதாரப் படங்கள், குளோப் முதலிய பல உபகரணங்களும், ஆர்மோனியம்,

கிராமபோன், மிருதங்கம், முதலிய இன்னிசைக் கருவிகளும் உள்ளன.

புக் ஸ்டால்

மாணவர்கட்கு வேண்டிய பாட்புத்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் ஆகியவை இவ்வித்தியா சாலையின் சார்பில் விற்பனைசெய்யப் பெறுகின்றன.

மீனாட்சி சங்கம்

இது வித்தியாசாலையின் மாணவ மாணவிகளையும், இதரர்களையும் உறுப்பினர்களாக உடையது. விரிவுரை வன்மையையும் தாம் உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துச்சொல்லி அவர்களை மகிழ்விக்கும் தன்மையையும் வளர்க்கின்றது. சிறுவர், சிறுமியர் திங்களுக்கு ஒரு முறை பாட்டு, பேச்சு, நடிப்பு, நிகழ்த்தி வருகின்றனர். திங்கட் கூட்டங்களில் ஆசிரியர்களும் சிறப்புக் கூட்டங்களில் வெளியிலிருந்து வரும் பெரியார்களும் அவைத் தலைமையமர்வர்.

பழைய மாணவர் சங்கம்

இவ்வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கம் 9-6-42ல் உயர்திருவாளர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களால் திறக்கப்பெற்றுப் பணி செய்து வருகிறது.

விழாக்கள்

மகாத்மா காந்தி அடிகள், கவி சுப்பிரமணிய பாரதியார், சுவாமி விவேகானந்தர், திலகர், புத்தர்

திருவள்ளுவர், வள்ளலார், தாகூர், கம்பர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆகிய பெரியார் விழாக்களும் சைவ சமய குரவர்களான திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வர் விழாக்களும், வருடப் பிறப்பு விழா, விநாயகர் சதுர்த்தி விழா, சுகாதார விழா ஆகியனவும் கொண்டாடப்பெற்று வருகின்றன.

பரீட்சை

ஒவ்வொரு வாரமும், வாரப் பரீட்சை நடைபெறுவதுடன், வித்தியாசாலை ஆசிரியர்களால் பிரதி வருடமும் 3 பரீட்சைகள் நடத்தப்பெற்று மாணவ மாணவிகளுக்கு வகுப்புத் தேர்ச்சிக் குறிப்புகள் (**Progress Reports**) வழங்கப்பட்டு, பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும் தெரிவிக்கப்பெறுகிறது.

நடைமுறை

நவீன கல்வி முறைகளை அனுசரித்து பிள்ளைகளுக்குப் பாடங்களை, சிறப்பாக எளிதில் கற்பிப்பதுடன் பொதுவாக தேசீய, சமூக, சமய உணர்ச்சிகளும் ஊட்டப்படுகின்றன. சுத்தப் பரிசீலனைக்காக (**Neatness Register**) ஒவ்வொரு வகுப்பிலும் பிரதி தினமும் பதிவு செய்யப்பெறுகிறது.

கொடிவணக்கம்

வெள்ளிக்கிழமை தோறும் மாணவ மாணவிகள் தேசீயக் கொடியேற்றி கொடிவணக்கம் செய்து வருகிறார்கள்.

ஆலய வழிபாடு

வித்தியாசாலை மாணவ மாணவிகள் வெள்ளிக் கிழமை தோறும் மாலை இந்நகர்ச் சிவாலயம் சென்று தமிழ் மறையோதி இறைவனை வழிபட்டு வருகிறார்கள்.

ஹிந்துஸ்தான் சாரணீயம்

1940 ல் இவ் வித்தியாசாலையில் சொக்கலிங்க இளஞ்சாரணர் குழு ஒன்று ஏற்படுத்தப்பெற்று மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். தற்போது 24 இளஞ்சாரணர்கள், இளஞ்சாரணாசிரியர் (திரு மு. இராமாநுஜம் பிள்ளை) ஆக மொத்தம் 25 பேர்.

வித்தியாசாலை வெளியீடுகள்

வித்தியாசாலையின் வெளியீடுகளாக விவேகானந்தர் வீரமொழிகள், திருப்புள்ளிருக்கு வேளூர்ப் புகழ்மாலை, திருவாசகம், திருவருட்பா, திருநாரையூர்த் திருமுறை, ''திருவளர் தாமரை'' என்பனவற்றைத் தனியே அச்சிட்டு வேண்டுவோர்க்கு இலவசமாக வழங்கப்பெற்று வருகின்றன.

18 வது ஆண்டு விழா

இவ் வித்தியாசாலையின் 18 வது ஆண்டு விழா 2—6—45 சனிக்கிழமை பிறபகல் 5 மணிக்கு குமரன் ஆசிரியர் திரு சொ. முருகப்பா அவர்கள் தலைமையில் ஆண்டு விழாவுக்கென அமைக்கப்பட்ட கொட்டகையில் சிறப்பாக நடைபெற்றது. மாணவ

மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு, சிறு நாடகங்கள் (வள்ளலாரும் பலி நிறுத்தலும், இரண்டு வார்த்தை இங்கிலீஷ், சங்கீத வித்வான்) நிகழ்ந்த பின்னர் மதுரை ஜோதி சன்மார்க்கப் பிரசாரகர் திரு. அ. கங்கணன் அவர்கள் வள்ளலார் கொள்கைகளை வலியுறுத்திப் பேசினார். பின்னர் காரைக்குடி M. S. M. ஹைஸ்கூல் ஆசிரியர் திரு. R. நடராஜ பிள்ளை அவர்கள் "குறளும் அறிவும்," என்ற பொருள் பற்றி சொற்பெருக்காற்றியதும் தலைவர் முடிவுரையில் இந்து கலாசாரக் கல்வியின் அவசியத்தை விளக்கிக் கூறினார்கள். ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஸ்ரீ சச்சிதானந்தம்பிள்ளை முதலிய பெரியோர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை தலைமை ஆசிரியர் திரு. மு. இராமாநுஜம் பிள்ளை வாசித்தார்கள்.

பின்னர் அதிபர் திரு. ந. சொ. அரு. அருணசலன் செட்டியார் அவர்களால் வந்தனம் கூறப்பெற்று விழா இனிது நிறைவெய்தியது.

19-வது ஆண்டு பரிசளிப்பு விழா

இவ்வித்தியாசாலையின் 19-வது ஆண்டு பரிசளிப்பு விழா விய ஆண்டு, வைகாசித் திங்கள் 13-ம் நாள் (26-5-46) ஞாயிறு மாலை 3 மணிக்கு கண்டனூர் சிட்டாள் ஆச்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. S. இராகவாச்சாரி M. A. L. T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு, சிறு நாடகங்கள் (புத்தரும் பிம்பிசாரரும், பக்தமீரா, விறகு விற்ற படலம்) முதலியன நடந்த பின்னர்

கோனுபட்டு சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. சுப. இராமநாதன் செட்டியார் M. A. அவர்கள் "கவிஞரின் பொதுத் தன்மை" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். தலைவரவர்களால் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், நீண்ட நாட் பரிசு, சுத்தப் பரிசு, வகுப்புத் தேர்ச்சிப் பரிசு, நடிப்புப் பரிசு முதலியன வழங்கப்பெற்றன. தலைவர் முடிவுரைக்குப் பின்னர் அதிபர் திரு. ந. சொ. அரு. அருணசலன் செட்டியார் அவர்களால் வந்தனங் கூறப் பெற்று விழா இரவு 9 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

20.வது ஆண்டு பரிசளிப்பு விழா

இவ்வித்தியாசாலையின் 20-வது ஆண்டு பரிசளிப்பு விழா 30-5-47 பிற்பகல் 4-30 மணிக்கு திருப்பத்தூர் ரேஞ்சு கல்வி அதிகாரி திரு. V. K. கனகராஜ் **B. A. L. T.** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவ மாணவிகள் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம், சிறு நாடகங்கள் (பொன்னங்கோட்டைப் புதையல், தமிழ்நாட்டு சட்டசபை, சுரந் தீர்த்த படலம்) முதலியன நிகழ்த்தினர். பின்னர் கோனுபட்டு சரஸ்வதி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. S. கஸ்தூரிரங்கன் **B. A. L. T.** அவர்கள் "கம்பராமாயணம்" என்னும் பொருள் பற்றி சொற்பெருக்காற்றினர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின்னர் அதிபர் திரு. ந. சொ. அரு. அருணசலன் செட்டியார் அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவெய்தியது.

அனுதாபக் கூட்டங்கள்

(1) தமிழ்ப் பேரறிஞர் உயர் திருவாளர் சுவாமி விபுலானந்தர் B. SC. அடிகள் மறைவு குறித்து சொக்கலிங்க வித்தியாசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் 2-8-48 மாலை 4 மணிக்கு ஓர் இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

(2) நம் தேசத் தந்தையும், உலக சமாதானப் பெரியாருமாகிய மகாத்மா காந்தி அடிகள் மரணம் அடைந்ததை முன்னிட்டு மௌன ஊர்வலம் வந்த பின்னர் பிரார்த்தனை மண்டபத்தில் 2-1-48-ல் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

(3) நமது வித்தியாசாலையில் பல ஆண்டுகள் உடனிருந்து சிறந்த பணியாற்றிய காரைக்குடி வித்வான் அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் இறை நிழலை அடைந்தமை முன்னிட்டு 5-3-48-ல் பிரார்த்தனை மண்டபத்தில் இரங்கற் கூட்டம் நடைபெற்று வித்தியாசாலைக்கு விடுமுறையளித்ததுடன் அன்னவர் குடும்பத்தார்க்கு அனுதாபச் செய்தியும் அனுப்பப்பட்டது.

மகாத்மாஜி நினைவுப் பிரார்த்தனை வாரம்

ஸ்ரீ ஜத் காந்தி அடிகள் மறைவு கருதி வெள்ளிக் கிழமை தோறும் 15 நிமிஷங்கள் அவருடைய போதனைகள், பிரார்த்தனைப் பாட்டுகள் சொல்லப்பட்டு வருகிறது.

திருமுறைப் போட்டிகள்

(1) *1-9-45*-ல் காரைக்குடி சிவநேசர் திருக் கூட்ட ஆதரவில் நடைபெற்ற திருப்பள்ளியெழுச் சிப் போட்டியில் இவ்வித்தியாசாலை மாணவிகள் கலந்துகொண்டு, 2-வது பரிசு ஒருவரும், மற்ற வர்கள் மூன்றாவது பரிசுகளையும் பெற்றனர்.

(2) *16-9-45*-ல் காரைக்குடி கதிரேசன் கழகத் தாரால் ஏற்படுத்தப் பெற்ற திருகோத்தும்பீ, குயிற்பத்து போட்டியில் நம் வித்தியாசாலை மாண வர்கள் கலந்து கொண்டு, அரு. வைத்தியநாதன் முதல் பரிசு, வெள்ளிக் கோப்பையும், மு. இரா மையா மூன்றாவது பரிசும் பெற்றனர்.

(3) 19-1-46-ல் கோனபட்டு இளைஞர் ஒற் றுமைக் கழகத்தாரால் நடத்தப்பட்ட தமிழிசைப் போட்டியில் வித்தியாசாலை மாணவி S. அலர்மேலு வுக்கு முதற் பரிசு வெள்ளிக் கிண்ணம் ஒன்று (ராஜா சர். அவர்கள் பரிசு) கிடைத்தது.

(4) *18-8-46*-ல் காரைக்குடி சிவநேசர் திருக் கூட்டத்தார் ஆதரவில் நடைபெற்ற தனித் திருத் தாண்டகப் போட்டியில் இவ்வித்தியாசாலை மாண வர்கள் இருவர் கலந்துகொண்டு வெற்றி பெற்று முதற் பரிசு ரெ. கணபதி கிருஷ்ணனும் (வெள்ளிக் கோப்பையும்) க. கலியாணசுந்தரம் 3-வது பரிசு வெள்ளி மெடலும் பெற்றுள்ளார்கள்.

(5) *20-8-46*-ல் காரைக்குடி சிவநேசர் திருக் கூட்டத்தாரால் ஏற்படுத்தப் பெற்ற திருவாசகப்

போட்டியில், நம் வித்தியாசாலை மாணவிகள் ஒன்பது பேர் கலந்து கொண்டு அனைவரும் 3-வது பரிசுகள் பெற்றனர்.

(6) 10-8-47-ல் காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தாரால் ஏற்படுத்தப் பெற்ற ஒளி வளர் விளக்குப் போட்டியில் ஐந்து மாணவர்கள் கலந்து கொண்டு மூன்றும் பரிசுகள் பெற்றனர்.

(7) 12-8-47-ல் சிவநேசர் திருக்கூட்டத்தாரால் ஏற்படுத்தப் பெற்ற பாமாலை, குயிற்பத்து திருத்தெள்ளேணம் போட்டியில் வித்தியாசாலை மாணவ மாணவிகள் கலந்துகொண்டு மூன்ருவது பரிசுகள் எல்லோரும் பெற்றனர்.

சிறப்பு நடிப்புகள்

(1) காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தார் அழைப்பிற் கிணங்க, ஷை 22-வது ஆண்டு விழாவில் இவ்வித்தியாசாலை மாணவ மாணவிகள் "மாமனுக வந்து வழக்குரைத்த படல"த்தை நடித்துக் காண்பித்து, சபையினரை மகிழ்வித்தனர். வெள்ளிக் கோப்பை ஒன்றை, நடிப்பைப் பாராட்டி திருக்கூட்டத்தார், வித்தியாசாலைக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

(2) 30-9-45 காரைக்குடி கதிரேசன் கழக ஆண்டு விழாவில் வித்தியாசாலை மாணவ மாணவிகள் சைவ ஆடல் பாடல்களை நடித்துக்காட்டினர்.

(3) 30-8-46 காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தார் அழைப்பிற் கிணங்க, திருக்கூட்டத்து

13-வது ஆண்டு விழாவில், இவ்வித்தியாசாலை மாணவ மாணவிகள் "விறகு விற்ற படலம்" நடித்துக் காண்பித்து சபையினரை மகிழ்வித்தனர். வெள்ளிக் கோப்பையும், நற்சான்றுப் பத்திரமும், மேற்படி நடிப்பைப் பாராட்டி அளித்திருக்கின்றார்கள்.

(4) 26-4-47-ல் அலவாக்கோட்டை சாரதா வாசகசாலை ஆண்டு விழாவில் இவ்வித்தியாசாலை மாணவ மாணவிகள் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் நடத்தி சபையினரை மகிழ்வித்தனர்.

(5) நெற்குப்பை திருவாளர் ஏ. ஒய். சுந்தரராஜன் சேர்வை அவர்கள் அழைப்பிற் கிணங்க வித்தியாசாலை மாணவ மாணவிகள் பாம்பாரம்மன் கோயில் திருவிழாவில் கலந்துகொண்டு பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் முதலியவை நடத்தினர்.

சுதந்திர தினவிழா

15—8—47

இந்தியா விடுதலை அடைந்ததை முன்னிட்டு 14-8-47 இரவு 12-5க்கு இவ்வூர் சுதந்திர தினவிழாக் கமிட்டியாருடன் சேர்ந்து நகரசிவன் கோயில் மைதானத்தில் சுதந்திர இந்தியக் குடியரசின் கொடியேற்றி வைக்கப்பட்டது. 15-8-47 காலை 9 மணிக்கு பொதுஜனங்களுடன் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், ஊர்வலமாக மேளத்துடன் காளைகள் பூட்டிய இரதத்தில் தலைவர் படங்களை அலங்கரித்து, வித்தியாசாலைக்கு 10-30 மணிக்கு

வந்து சுதந்திர தேசியக் கொடியை ஏற்றி வணக்கம் செய்தனர். 19-8-47ல் வித்தியாசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் விடுதலை தின சிறப்புக் கூட்டம் கொத்தமங்கலம் L. அண்ணுமலை B. A., அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. பல அன்பர்கள் சொற்பெருக்காற்றியதும் எல்லோருக்கும் சர்க்கரைப் பொங்கல், தேத்தண்ணீர் வழங்கப்பெற்று விழா இனிது நிறைவெய்தியது.

வேண்டுகோள்

உலகத்தில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு கல்வி மிக மிக அவசியம் என்பது சொல்லாமலேயே விளங்கும். ஒரு நாட்டின் சீறும், சிறப்பும் பொருள் வளமும், உடல் நலமுமாக அனைத்தும் அந்நாட்டின் அடிப்படைக் கல்வியைப் பொறுத்ததாகவே அமையும். ஆகவே நம் நாட்டில் கல்லாதவர்கள் தொகை மிகுதி என்ற குறையை நீக்குவதற்கு வீடுதோறும், கலை விளக்கமும், வீதிதோறும் இரண்டொரு பள்ளியும் தோன்றி நம் நாடு கல்வியில் தலைசிறந்து விளங்க வேண்டுமென்பதே நமது வேண்டுகோளும் பிரார்த்தனையுமாகும். எனவே அனைவரும் தங்கள் குழந்தைகளை தினமும் தவருது இக்கல்விச்சாலைக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்தும் அவ்விழுமிய தொண்டில் ஈடுபட்டுள்ள எங்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

நன்றியுரை

இவ்வித்தியாசாலை வளர்ந்தோங்குதல் வேண்டும் என்ற பேரவாவினுல் பல பெரியார்கள்

வருகை புரிந்துவாழ்த்துக்கூறுகின்றனர். உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் பெற்றோர் பலர் தங்கள் அருமைக் குழந்தைகளை அன்புடன் அனுப்பி வருகின்றனர். இம்மாதிரி இவ்வித்தியாசாலையின் நலம் கருதி உழைத்துவரும் அன்பர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பரீட்சித்தும் பார்வையிட்டும் வருகின்ற கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும், அன்பர்களுக்கும், அவ்வப்போது நிகழும் விழாக்கள், கூட்டங்கள் முதலிய விவரங்களை வெளியிடும் பத்திராதிபர்களுக்கும், பிற அன்பரனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலும் வணக்கமும் உரியதாகுக.

சுபம்

இங்ஙனம்,

அன்புள்ள,

ந. சொ. அரு. அருணாசலன்

அதிபர்,

சொக்கலிங்க வித்தியாசாலை,

லெட்சுமிபுரம்.

4—6—1948.

சொக்கலிங்க விலாஸ்
லெட்சுமிபுரம்.
சர்வதாரி ஆண்டு
வைகாசித் திங்கள்
22-ம் நாள்

OFFICIAL OPINIONS.

(Extract of the Inspection Report.)

26—7—45.

The annual inspection of the school was conducted today. Strength and attendance 75/102.

Accommodation: The school is well provided with a good building given rent free. Accommodation is ample and well equipped. There is a fairly well maintained flower garden. Vegetable gardening may also be fostered. Playground space is adequate. Lat rine and urinal may be provided as already recommended. The tidiness and homely atmosphere of the school house is conducive for learning.

Equipment: Articles of furniture are abundant and well used. Provision for music, museum and reading room is made. Maps and appliances are well supplied. More for games and handicrafts may be provided. Teachers have prepared fairly adequate number of teaching aids. This is quite satisfactory.

Registers: The prescribed registers are maintained well. The census register should have population also noted caste-war. Record sheets are up-to-date. Syllabus and time tables are approved and followed. Teaching notes are kept.

Promotions: May improve. Stagnation and wastage may be still further reduced.

Text Books: Approved series from 2-5. Text book for I is also approved.

Personal Hygiene: Satisfactory.

Physical Education: Drill and games are taught.

Practical: Paper modelling is taught. Leaf work and clay modelling should be practised.

Extra Curricular: Cub activities are had Kummi kollattam, dialogues and conversation with songs are well practised.

General remarks: The roll is almost the same. Enrolment of girls is satisfactory. Accommodation and equipment are of a high order. Management takes interest of

the school. Teachers may be benefitted by fixing a scale of pay and admitting them to the benefits of the Provident Fund. This will help them in stablising their continuance in this school. Instructions imparted and results are satisfactory. The atmosphere tone and efficiency of the school is good.

(Sd.) R. RAMASWAMY
26-7-45.
Deputy Inspector of Schools,
Tirupathur range.

Visited Chockalinga Vidyasala
Lakshimipuram

on 22-8-45.

1. Accommodation—very good.
2 Equipment—Very good; Museum-Very good.
3. Teachers—All are present.
4. Glass tiles may be put up, to on either side, just over the big pials, to serve as a reading room.
5. It will be of immense use if the village school teachers are

brought over to this school at an annual gathering since this school may be considered as a model.

6. Strength 49 plus 42.
There is scope for improving enrolment.

7. General condition of the School—Good.

(Sd.) A. KHYOOM.
District Educational Officer,
Ramnad Dt.

I was glad to be shown round this fine school. The accommodation is quite good for the numbers with ample facilities for garden and play. The school has a nice library, necessary furniture and appliances. More than all the enlightened Manager Sri N. S. AR. Arunachalan Chettiar is willing to put into practice any reasonable idea placed before him by the local educational officers. I wish the School every success.

(Sd.) S. R. U. SAVOOR M. A., D. Sc.
21-12-45

Director of Public Instruction,
Educational Department, Madras.



21-12-45ல் மாகாணக் கல்வித்துறைத் தலைவர் (D.P.I.) விஜயம் செய்தார்கள்.

Visited with the D. P. I.

(Sd.) Mohammed
Divisional Inspector of Schools
Madura

18-7-1946. The annual inspection of the school was conducted today. The strength and attendance were 83/112.

Accommodation is quite adequate and suitable. Assets of furniture are adequate, and satisfactory. Appliances in the shape of maps, museum materials, library and games materials are adequate and suitable. A harmonium for music is in use. A music instructor is specially appointed in the school.

Registers are in order. Notes are to be maintained regularly and scrutinised by the Head master periodically.

The staff consists of four teachers of whom one is a matriculate trained, another an S. S. L. C., ineligible higher trained, a

higher trained and a lower trained lady teacher.

Personal Hygiene is attended to satisfactorily. There is a touch of devotion with cleanliness in the school.

Physical: Drill and games are regularly practised. Competitive sports were held and prizes distributed.

Extra curricular: Parents' association, pupils' association and exhibition of historic talents are carried on satisfactorily. Kummi and Kollattam, for girls, Thevaram recitals and songs adequate. Enactments of drama at the anniversary was specially good.

General remarks: The strength has improved a little. Instruction is satisfactory in all subjects. Extra curricular activities are carried on with zeal. The management is taking interest in the advancement of the school. Enrolment of girls is good. Practical work may receive more attention. The tone and efficiency of the school

continue to be good. The general condition is quite good.

(Sd.) R. Ramaswami,
18-7-46.
D. I. of Schools.
Tirupathur Range.

1—8—1946

Visited tbe School by surprise this afternoon. the strength and attendance at visit 87/112. Attendance may improve. Registers are in order. Normal work was going on in all the classes.

R. Ramaswamy, 1—8—46
D. I. of Schools,
Tirupathur Range

14-10-1946.

Visited the school this afternoon, when all the four teachers and another music instructor were present. The strength and attendance of pupils were 83/113.

The level of instruction and the general condition of the school continue to be satisfactory. The manager takes keen interest in the growth and usefulness of this institution.

The school was found in normal working order at the time of visit.

(Sd.) V. K. Kanagaraj,
D. I. of Schools,
Tirupathur Range

14-5-47.

இன்று பிற்பகல் பார்வையிடப்பட்டது. ஆசிரியர்கள் ஐவரும் ஆஜர். ரோல் ஆஜர் 89/121. பள்ளிக்கூட கட்டிடம் இடவசதி உபகரணங்கள் முதலியன திருப்திகரமாக இருக்கிறது.

சங்கீதம், கும்மி, கோலாட்டம் நல்ல கவனம் பெற்றுவருகின்றன.

பாடசாலை அபிவிருத்திக்காக மானேஜர் Sri N. S. AR. அருணாசலம் செட்டியார் அவர்களும் ஆசிரியர்களும் உழைத்து வருகின்றனர்.

(Sd.) V. K. Kanagaraj
14-5-47.
D. I. of Schools,
Tirupathur Range.

19—7—47

The annual Inspection of the School was conducted today. The Headmaster Sri Ramanujam is a secondary grade T. T. C., holder

The strength and attendance of pupils were:— 107/130.

Accommodation, furniture, equipment and teaching aids are adequate and suitable. There is a good museum for the school with plenty of teaching aids. There is a gramaphone for the school use.

Staff: 1 Secondary grade T. T. C. (H. M.), 1 Higher T. T. C., and 1 lower T. T. C., and 1 music teacher.

There is plenty of space for gardening and play ground. More vegetables may be grown soon.

All the registers are maintained in order.

Std. I. Pupils are fair in 3 R's. 12 pupils have been admitted in june 47. Arithmetic fair.

Std. II. Pupils are very fair in 3 R's. Geography has been taught. Five pupil's. progress should improve.

Std. III. All but five pupils are very fair, in 3 R's The general knowledge subjects have been taught fairly well.

Std. IV & V. Pupils are very fair in 3 R's. Questions in the general knowledge subjects were answered well. Recitation and Arithmetic good. Essay writing very fair: The level of instruction and the attainment of the pupils on the whole are fairly satisfactory. Extra curricular activities receive good attention. The school and the premises are kept neat and tidy. Parent's meeting, pupil's association meetings are held periodically.

The school is run along very efficient lines. The strength and attendance of girls are satisfactory and are a commendable feature of the school. The discipline and atmosphere of the school continue to be good. The strength and attendance of pupils have increased since last inspection. The pupils appear bright and cheerful.

The manager and founder Sri. N. S. AR. Arunachalan chettiar is taking keen interest in the usefulness and growth of this institution.

(Sd.) V. K. KANAGARAJ,
19—7—47.
D. I. of schools,
Tirupathur Range.

19-11-47

Visited tbis school this day after noon. All the teachers were present. The strength and attendance were 78/125

There is a vegetable garden newly put up in front of the school. The syllabus has been covered in all the classes. Weekly tests are conducted regularly.

There is the good influence of the school and the rich equipment and congenial environment provided at a great cost by the kind philanthrophic manager.

The attendance of pupils can improve further.

(Sd.) V. K. Kanagaraj
19-11-47
D. I. of Schools,
Tirupathur Range

23-1-48.

இன்று காலை இப்பாடசாலை பார்வையிடப்பட்டது. ஆஜர் 84/130. இடவசதி முதலியவை திருப்திகரம். பாடங்கள் கிரமமாய் நடந்து கொண்டிருந்தன. பாட்டுகளுக்கு பாட அட்டவணை எழுத வேண்டும். ஆஜர் அபிவிருத்தி அடையக்கூடும்.

பாடசாலை நல்ல முறையில் நடைபெறுவதாக காணப்படுகிறது.

(Sd.) K. S. Nagarathnam,
23-1-48

District Educational Officer.
Ramnad.

4-5-48

The annual Inspection of the school was conducted to-day. Staff 4 teachers. The first assistant Sri. K. R. Subbiah is on casual leave. The strength and attendance of pupils were 46/65, 41/63

Accommodation, equipment, furniture and teaching aids are adequate and suitable as last year.

Staff:- 1 Secondary Grade T. T. C. 2 Higher Grade T. T. C. & 1 Lower Grade T. T. C. The garden and the play ground continue to be like last year.

Promotion is 80 percent. Satisfactory. The census register must be renewed. All the registers are maintained in order.

Stagnation is not heavy. Wastage may be avoided in future Time-table and Syllabus are approved and followed.

Instruction: Std I. Except 6 pupils all are fair in 3 R's. Action songs and stories have received good attention. Mental arithmetic fair. Writing should improve.

Std II. Pupils are fair in 3 R's. Action songs and stories have been taught well.

Std III. Mental Arithmetic and Geography have been taught. Recitation fair. The progress of 3 pupils needs greater attention.

Std IV. The progress of 10 pupils is fairly satisfactory. The general knowledge subjects have been taught fairly well. Recitation fair.

Std V. The progress of pupils in 3 R's is fairly satisfactory. Pupils were able to answer the questions in the general knowledge subjects. Recitation and Arithmetic have received good attention.

The level of instruction and the attainment of the pupils are fairly satisfactory. Extra curricular activities such as parents' association and pupils' association and

Cubbing receive good attention. There is scope for further improvement in strength and attendance of pupils. There are ample facilities for the proper conduct of an efficient school.

The general condition of the school continues to be satisfactory.

(Sd.) V. K. Kanagaraj.
D. I. of Schools, 4-5-48
Tiruppattur Range.

VISITOR'S OPENIONS.

29-10-45

We had the pleasure of visiting this school and seeing something of the school and scout activities this afternoon. We were very pleased to see the school run on useful lines by the patron of the school Sri. N. S. AR. Arunachalam Chettiar and the Head master and the teachers of the school.

We wish the institution all success.

(Sd.) V. S. Ratnasabapathi,
Provincial Organising Commissioner
H. S. A., Madras.

(Sd.) பழ. திருப்பதி
Secretary H.S.A. Rd Dt.

(Sd.) K. Varadarajan
A.D.C. Tanjore.

(Sd.) S. Vajravel
Dt. Scout Organiser
Ramnad

(Sd.) AR. Arunachalam
Dt. R. S. L
Ramnad.

I had the pleasure to preside over one of the special meetings of the school. The

crowded programme in the agenda impressed me and my friends very much. Special reference must be made about the very keen interest evinced by the management and the staff in the promotion of Kollattam, Kummi. The programme of dancing and the recitations from Thevaram and Thiruppugazh are, I should say, a special feature of this institution. They are not generally taught in this style in other schools.

The building is neat and clean and ideally situated. The pupils were neat and tidy. The school boasts of decent library and a small museum.

The management and the staff spare no pains to improve the students of the school. I congratulate the donor and the staff on the very efficient working of the institution.

I wish the school a very bright future.

V. Appasamy
5-12-45
Medical Officer,
Kanadukathan.

One of the most ably and efficiently run institution. I spent an hour in 25-1-46 and found it very interesting. I hope that the institution will grow from strength to strength.

P. V. Kuppuswamy
25–1–46

I take pleasure in recording my appreciation of the school which I had the occassion to visit on my being selected to preside over one of its special meetings. The school is well built, kept neat and clean, has good library and museum. The pupils show great enthusiasm and are dressed clean. This speaks well of the management as well as of the staff.

I wish the institution very success.

K. S. Mahadeva Aiyer,
Health Inspector 4-2-46

I am glad. I was asked to preside over the Health Week functions to-day. Otherwise I might have missed the opportunity of visiting the school. This school can easily be a model-for cleanliness, order-

liness and discipline-for all the other Elementary Schools in the district and elsewhere too.. In saying this I think I have said enough.

(Sd.) R. Sambamoorthy
Dt. Health Officer, Ramnad.

It fills me with joy unspeakable to preside over the Anniversary Celebrations of a school which is run on highly efficient lines and serves as a model to all other schools in these parts. Any one who comes into contact with the donor Sri. N. S. AR. Arunachalan Chettiar cannot but be impressed with his spirit of unostentatious service in the most noble cause of education. The teachers of the school, especially, the head master, are imbued with a sense of sacrifice and service and I heartily congratulate them on the enthralling items of entertainment they have got up to mark the occassion. I wish the donor a long life of continued usefulness and the school one of the rarest of its kind in these areas, a very bright and successful future.

S. Raghavachary,
Head master
C. A. M. High School
26th May, 1946 Kondanoor.

I visited the Chockalinga Vidyasala on the occassion of the twentieth anniversary celebrations of the school. Sri. N. S. AR. Arunachalan Chettiar is indeed fortunate in having a band of enthusiastic young men to work in the institution. I wish the school all success.

V. Rengaswamy Aiyengar
Head master,
30-5-47 A. C. High School, Pallathur.

I had the good fortune of being present at the twentietn Anniversary Celebration of the Chockalinga Vidyasala of Lakshmipuram I heartily congratulate Sri. N. S AR. Arunachalan Chettiar and the staff on the excellent work that is being turned out.

S. Kasthurirangan,
Head master,
Saraswathi High School
30-5-47 Konapet.

I had the previlege of presiding over the twentieth Anniversary of the School yesterday The pupils of the school exhibited histrionic talents to an extent that

surprised one and all. No sphere of activity was untouched. The school manager Sri. N. S. AR. Arunachalam chettiar and the staff have spared no pains to improve the school in every direction. The three aspects of the pupil, i. e., body, mind and soul need to be developed uniformly if education is to be considered complete and that ideal is kept in view in this school. This deserves all praise.

These are certain aspects in the school which can serve as a good model for other schools to follow.

The crowded programme of the Anniversary functions kept the audiance spell bound and everyone of the items was as good as the rest.

I wish management and the staff and the pupils all success.

(Sd.) V. K. Kanagaraj,
31-5-47
Dy. Inspector of Schools,
Tiruppathur Range.

29-12-47

I had the pleasure of presiding over the "Parents Day" meeting of the Chockalinga Vidyasala of Lakshmipuram on 29th December, 1947.

I was attracted by the neatness of the entire premises, and the order of things kept and maintained in their places.

The "Aid-To-Learning", picture charts, Library, Museum and other collections, speak of the interest evinced by the staff and pupil of the school is commendable.

Hoisting of the National Tricolour flag and the National Songs gave the start to the function. Music, Kollattam, Gummi and dances that preceeded the speeches were very impressive. Specially, the 'Lectures' on subjects like "Lenin and Bharathiar" etc., etc., rendered extempore by children of both sexes were very excellent and natural.

Impression:- "Here is an idial national school which may, with advantage, be copied by others."

The head master and his assistants deserve hearty congratulations, But-Stop-Not:-

"March on-wards with a fearless-mind-
And leave the shadows-far-behind."

(Sd.) C. E. K. Desigan,
Sub Divisional Officer, M. E. S.,
29-12-47 Air Fields, Chettinad.

உ
சிவமயம்
தேவி துணை

பார்வையாளர்களின் உள்ளக்கருத்துக்கள்

இன்று 18ம் ஆண்டு விழாவில் தலைமை வகித்துப் பிள்ளைகளின் பாடல், ஆட்டல்களையும் பார்த்தேன். பிள்ளைகள் திறமையாக பயிற்றப்பட்டிருக்கின்றனர். படிப்பு மிகுதியும் கவனத்துடன் படிப்பிக்கப்படுவதை அறிந்தேன். பள்ளிக்கூட கட்டிடமும் குழந்தைகளும் சுத்தமாக இருப்பது உள்ளத்தைக் கவர்ந்தது. புத்தகசாலை மியூசியம் படிப்புக்கு வேண்டிய ஏனைய உபகரணங்கள் யாவும் குறைவர அமைந்துள்ளன. இதனை தமது வாழ்க்கையின் ஒரு குறிக்கோளாக எண்ணி, இதன் அதிபர் அருணசலம் செட்டியாரவர்கள் முழு ஊக்கத்துடனும் தாராள மனத்துடனும் நடத்தி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். சென்ற பதினெட்டாண்டுகளாக இந்த சொக்கலிங்க வித்தியாசாலைக்கு சுமார் 30,000 ரூபா செலவிட்டிருக்கிறார்கள். சுமார் 1000 பிள்ளைகட்கு மேல் படித்திருக்கின்றனர். காலத்திற்கேற்ப நடத்தப்பெறும் கல்வியறத்தில் பொறுப்பேற்று இவ்வளர்ச்சிகண்டு மகிழும் அன்பர் அருணசலரின் வளம் பெருகுவதாக. உபாத்தியாயர்களும் இப்பள்ளியில் ஒத்துழைத்துப் பள்ளிக்கூடத்தின் பயனை பிள்ளைகள் அடைய பணிபுரிவது இயல்பாக அறியக்கிடக்கின்றது. ஹிந்து நாகரீகத்தையும், சமயபக்தியையும், தமிழன்பையும் பேணி நடத்தப்

பெறும் இப்பள்ளிக்கூட ஆசிரியர்களும் அதிபரும் அறிஞர்களின் பாராட்டலுக்கு பாத்திரமாவார்கள்.

சொ. முருகப்பா
பார்த்திப வைகாசி 20.

இவ்வித்தியாசாலையில் உள்ள இளஞ் சாரணப் படையின் பயிற்சித் திறமையும் ஒழுங்கையும் அவர்களின் கைத்திறனையும் கண்டு களிப்புற்றேன். சிறுர்கள் பணி போற்றற்குரியது. உண்மைச் சாரணீயவழி ஒழுகிக்கடைத்தேற வேண்டுகின்றேன்.

அளகப்பாஅண்ணுமலை
2—5—45
கோட்டையூர்.

பார்த்திப வைகாசி 22.

சொக்கலிங்க வித்யாசாலை ஆண்டு விழாவில் இவ்விளஞ் சாரணர்களின் தொண்டும் அத்தொண்டிலுற்ற ஊக்கமும் கண்டு, ஆனந்தம் கொண்டு அருள்வள்ளல் திருவருள் இவர்களுக்கு மேன்மேலும் ஊக்கமும் சேவையில் கீர்த்தியும் கொடுக்க வேண்டுகின்றனன்.

அன்பு
ந. விஸ்வநாதம்
காரியதரிசி.
பரிபூரணானந்த தேசிய சமரஸ
சுத்த சன்மார்க்க சங்கம்,
கும்பகோணம்.

பார்த்திப ஆவணி 27உ புதவாரம் (12-9-45) முற்பகல் இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியா சாலையில் நிகழ்ந்த வரகவி சுப்ரமணிய பாரதியாரின் விழாத் துவங்கப்பெற்றது. அது காலை அவ்விழா விற்குத் தலைமை தாங்கும் பேறுற்றேன். இவ் வித் யாசாலையில் பயிலும் மாணவ மாணவிகள் செந் தமிழ் மணங்கமழத் தெய்வத்திருமுறை பாராயண மும் சைவசமயச் சொற்பொழிவும் புரிதலைக்கண்டு மிகமிக மகிழுப்பெற்றேன். ஆசிரியன்மார்கள் ஒற் றுமையுடன் உழைத்து ஒழுக்கமுடன் கல்வி பயிற்றி வருதல் பாராட்டத்தக்கதே. சைவமணங் கமழ தலைசிறந்த வித்தியாசாலை யென்பதிது வென் ருல் யாரும் மறுக்க முடியாது. நாட்டிற்குழைக் கும், உழைத்த பெரியார்களின் சீரிய கொள்கை களைப் பின்பற்றி நடப்பது. எல்லாம் வல்ல ஸ்ரீ மீனாட்சி சுந்தரி சமேத சொக்கலிங்கப் பெரு மான்றிருவருளால் எல்லா நலங்களும் முற்றெழி லுடன்றிகழ்வதாக. திகழ்வதாக. நலம்.

வாழ்த்துரை

அருணாசலக் குரிசில் அண்ணலருள் தன்னால்
அருணோதயம் போல ஆக்கம்—தருணமுறச்
சொக்கலிங்கக் கல்லூரித் தாய்மையொடும்
வாழியரோ!
தக்க வகை கல்வியெல்லாம் தந்து.

இங்ஙனம்

தருமபுரவாதீனத் தமிழ்ப் புலவர்,
பண்டித வித்வான்
இராம. கோவிந்தசாமி பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர், அரசர் கல்லூரி,
திருவையாறு.
12—9—45.

இன்று 18ம் ஆண்டு 8வது மாதக் கூட்டத்தில் தலைமை வகித்து, பள்ளிக்கூட மாணவ, மாணவிகளின், பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டம் முதலியவற்றைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். பிள்ளைகள் உயர்ந்த முறையில் கல்வி கற்பிக்கப் பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடக் கட்டிடமும் குழந்தைகளும் சுத்தமாக இருப்பது சுகாதாரத்தை போற்றி வளர்ப்பதாகும். குழந்தைகளின் அறிவு வளர்ச்சி கருதி புத்தகசாலை, மியூசியம் இன்னும் பல முக்கியசாதனங்களும் ஒருங்கே அமைந்துள்ளன. பள்ளிக்கூடம், அதன் வளர்ச்சி அதன் முன்னேற்றம் முதலிய விஷயங்களில் அதிபர் அருணசலஞ் செட்டியார் காட்டி வரும் ஊக்கமும் தாராள மனப்பான்மையும் போற்றத் தக்கதே. அதிபர் கடந்த 18 வருஷ காலமாக பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு வித்யாசாலையை சீர்திருத்தி வந்திருக்கிறார். இவ்வித்யாசாலையில் கல்வி கற்ற நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று சிறந்த கல்வி அறிவு படைத்தவர்களாகவும் உயர் பதவியை உடையவர்களாயும் இருப்பது குறிப்பிடத்தக்கது. உபாத்தியாயர்கள், குழந்தைகளின் அறிவு, உடல்வளர்ச்சி முதலிய விஷயங்களில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். காலத்திற்கேற்ப நடத்தப்பெறும் இப்பள்ளிக்கூடத்தின் வளர்ச்சி கண்டு ஆனந்திக்கும் அதிபர் அருணசலஞ் செட்டியாரவர்கள் பாரில் பணி பல புரிந்து பல்லாண்டு வாழ பகவான் அருள் புரிவாராக. ஹிந்து நாகரீகத்தையும், சமய பக்தியையும், தமிழ் அன்பையும் தமிழிசையையும் பேணி நடத்தப்

பெறும் இப்பள்ளிக்கூட ஆசிரியர்களும் அதிபரும் அறிஞர்களின் பாராட்டுதலுக்கு பாத்திரமாவார்கள்.

அள. விர. பெ. விரப்ப செட்டியார்
4-12-45

தை 3௳ (16-1-46) நான் இன்று இப்பள்ளியை பார்வையிட நிர்வாகிகள் சந்தர்ப்பமளித்தார்கள். தவிர சங்கத்தின் மாத விழாவையும் கண்டு களித்தேன். பள்ளி சிறந்த முறையில் நடைபெற்று வருவதைக்கண்டு சந்தோஷித்தேன்.

டாக்டர் நாகநாதன்
திருவாரூர், 16-1-46

15—5—47

பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் உத்ஸாகமாக இருக்கிறார்கள். இதுதான் பள்ளிக்கூடத்தின் லட்சியம். மிக்க சந்தோஷம்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்
சோமு
15-5-47

வாழ்க தமிழ் நாடு

சொக்கலிங்க வித்தியாசாலையின் இருபதாம் ஆண்டு விழாவின்போது விஜயம் செய்து மகிழ்வ

டைந்தேன். "தந்தை மகற்காற்றும் நன்றி, அவை யத்து முந்தியிருப்பச் செயல்" என்ற உயரிய நோக்குடனிருக்கும் பெற்றோரின் பிள்ளைகள் "என் கடமை பணி செய்து கிடப்பதே" என்ற வாழ்க்கை குறிப்புடையாரின் தலைமையின் கீழ் பயிற்சி பெற்று வருகிறார்கள். எல்லாத் துறைகளிலும் குழந்தை களுக்கேற்ற முறையில் மாணவ மாணவிகள் திறமை காட்டுகிறார்கள். இப்பள்ளி மென்மேலும் வளர்ச்சிபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

எட்வின். தே. வில்லியம்ஸ்
கூட்டுறவு அதிகாரி, திருப்பத்தூர்.
31-5-47

33—6—47

இன்று மாணிக்கவாசகர் விழாவிற்கு தலைமை தாங்கும் பேற்றைத் தலைமையாசிரியர் எனக்குத் தந்தார். அப்பொழுது இப்பள்ளிக்கூட நடவடிக் கைகளை காணும் பேறு பெற்றேன். "ஏட்டுச் சுரக்காய் கறிக்காகாது" என்பதை நன்குணர்ந்து பாட்டு, பேச்சு, நடிப்பு முதலியவற்றிலும் மிக்க கவனம் செலுத்தி இருக்கிறார்கள். வேண்டுது மஃதே. மிக்க மகிழ்ச்சி.

ரு. நாரி **B. A., Hons**

சிவநேசர் திருக்கூட்டம், காரைக்குடி.

சர்வசித்து ஆவணி 4ம்தேதி

காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்து 24வது ஆண்டு நிறைவு விழாவிலே, பாண்டியன் சுரங்

தீர்த்த பட்லத்தை நாடக ரூபமாக நடித்துக் காட்டிய இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்யாசாலை யின் மாணவ மாணவிகளின் நடிப்புத்திறம் மிக போற்றுதற்குரியது. அந்தத்துறையிலேயே ஈடு பட்டவர்களின் நடிப்பில் காணக்கூடிய சிறந்த பகுதிகளெல்லாம் இந்த பரிசுத்த மனதுடைய மாணவ மாணவிகளின் நடிப்பில் நமக்கு கிடைக்கும்படி செய்த ஆசிரியர் திரு மு.ராமானுஜம் பிள்ளை முதலியோர்களின் போதனைத் திறமும் அந்த வித்தியாசாலையை அன்பு கூர்ந்து நடத்தி வரும் அதிபர் திருவாளர் ந. சொ. அரு. அருணா சலம் செட்டியாரவர்கள் கொடைத்திறமும் போற் றுதற்குரியன. மேலும் இந்தத் துறையில் ஈடு பட்டுப் பல நற்கருத்துக்களை உதவும் வண்ணம் இறைவன் அருள்வானாக!

சென்னிமலை சைவ சித்தாந்த சரபம்
சிவத்திரு ஈசான சிவாசாரியார்.

இன்று பாரதி விழாவில் தலைமை தாங்கும் பேற்றை எளியேன் பெற்றேன். இக்கல்வி நிலையம் போன்று நாடு முற்றிலும் உள்ள ஊர்கள் நகர்கள் எங்கும் பல பள்ளிகள் தோன்றினால் அறிஞர்கள் பல்லாண்டுகளாகக் கனவு கண்டுவரும் உலகம் நனவாகும் என்பது திண்ணம். பணி பல ஆற்றி இக்கல்வி நிலையம் பல்லாண்டு வாழ்க.

சுப. அருணசலம்
பள்ளத்தூர், 13-9-47.

அழகியதொரு சிற்றூர். அதன் அழகுக்கு அழகு செய்யும் ஒரு கல்விச்சாலை. அதுதான் இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை. அக் கல்விச்சாலையில் சிறுவர் சிறுமியர்க்குக் கல்வியுடன் ஒழுக்கமும் ஊட்டப்படுகின்றது. இயலிசை நாடகம் இவற்றில் இனிது மாணவ மாணவிகளுக்கு பயிற்சி தரப்படுகின்றது. காந்தியத்தின் அடிப் படைக் கொள்கைகளும் கலந்து புகுத்தப்படுகின்றது. அங்கு காந்திய மணம் கமழ்கின்றது. சைவ ஒளி திகழ்கின்றது. தூய்மை பெரிதும் நிலவுகின்றது. இவ்வளவு சிறப்புகளுடன் இப் பள்ளி திகழுதற்குக் காரணமாக ஆர்வமும் பண்பாடுமுடைய அருமையான ஆசிரியர்கள் அப் பள்ளிக்கு வாய்த்திருப்பது எடுத்துக் காட்டத் தக்கதாகும். அப்பள்ளியைக் கண்ணும் கருத்துமாய் வைத்துத் திறமையாய்க் கண்காணித்து வரும் அதன் அதிபர் அருணசலன் செட்டியாருக்குத் தமிழுலகம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

M. SP. சண்முகம் **B.A., Hons**
ஆசிரியர் 'சுயராஜ்யம்'
12-3-48

5—5—48

சொக்கலிங்க வித்தியாசாலையைக் கண்டு மகிழும் வாய்ப்பு நேர்ந்தமைக்கு யான் வெகு மகிழ்ச்சியடைகின்றேன். இதை நடத்தி வரும் பெரியார் திரு அருணசலம் செட்டியாரவர்கள் இதை நல்ல முறை முத்தமிழும் சிறப்புற விளங்கும் வகையில் நடத்தி

வருகின்றார்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை நன் முறையில் பயிற்சி பெற பேருதவி புரிந்து வருவது மிகவும் பாராட்டுதற்குரியது.

மாணவ மாணவிகளின் இசையும் நடிப்பும் பெரிதும் பாராட்டுதற்குரியது. இது மென்மேலும் சிறப்புற விளங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அன்பன்

ப. வடிவேல்

தமிழாசிரியர் நகராண்மைக் கழகக் கல்லூரி

சென்னை **5-5-48**

சொக்கலிங்க வித்தியாசாலையைக் கண்டு மகிழும் பேறு கிடைத்தது. இவ்வித்தியாசாலை தமிழ் தமிழர் தமிழ் நாடு ஆகியவற்றிற்குத் தொண்டாற்றும் உணர்ச்சியூட்டி வருவது குறிப்பிடத் தக்கது. ஆங்கில முறையைத் தமிழ் பண்பாடு குறையாது புகட்டி வரும் சிறப்பு எங்கும் காணுதற்கரிதான்று. இச்சிறப்பினையடைய சிறந்த துணை செய்துவரும் தலைவர்களும் தொண்டாற்றும் ஆசிரியர்களும் ஒத்த மனப்பான்மையுடன் உழைத்து வருகின்றமையின் நின்று நிலவி புகழடையும் என்பது ஒருதலை. இறையருள்வதாக.

அன்புள்ள

நா. கூத்தப்பன்

தமிழாசிரியர், நாடார் ஹைஸ்கூல், விருதுநகர்.

5-5-48

1948 ல் பரிசு பெற்றவர் விபரம்

வகுப்புத் தேர்ச்சிப் பரிசுகள்

1—வது வகுப்பு

முதற் பரிசு ரெ. கிட்டப்பன்
2—வது பரிசு முரு. முருகப்பன்

2—வது வகுப்பு

முதற் பரிசு அரு. ராமனாதன்
2—வது பரிசு கு. லெட்சுமணன்

3—வது வகுப்பு

முதற் பரிசு கே. சுப்ரமணியன்
2—வது பரிசு வ. சிதம்பரம்

4—வது வகுப்பு

முதற் பரிசு மெ. பழனியப்பன்
2—வது பரிசு கு. மீனாள்

5—வது வகுப்பு

முதற் பரிசு பழ. சண்முகம்
2—வது பரிசு வெ. காளைராஜா

அதிக நாள் வந்து பரிசு பெறுபவர்கள்

16—6—47 முதல் 30—4—48 வரை பள்ளிக்கூடம் நடைபெற்ற நாட்கள் 205½

1—வது வகுப்பு

முதற் பரிசு எஸ். மீனாள் 188 நாட்கள்
2—வது பரிசு கே. சின்னையா 186½ ,,

2—வது வகுப்பு

முதற் பரிசு	வயி. பசுபதி	194	,,
2-வது பரிசு	மு. லெட்சுமணன்	182	,,

3—வது வகுப்பு

முதற் பரிசு	எம். முத்தையா	186½	,,
2—வது பரிசு	வ. சிதம்பரம்	184½	,,

4—வது வகுப்பு

முதற் பரிசு	மெ. பழனியப்பன்	196½	,,
2-வது பரிசு	செ. சிதம்பரம்	195	,,

5—வது வகுப்பு

முதற் பரிசு	மு. சோலையப்பன்	195	,,
2-வது பரிசு	நா. அருணாசலம்	193½	,,

சுத்தமாக வந்து பரிசு பெற்றவர்கள்

1—வது வகுப்பு

முதற் பரிசு	முரு. முருகப்பன்
2-வது பரிசு	ராம. மீனாள்

2—வது வகுப்பு

முதற் பரிசு	வி. தெய்வானை
2-வது பரிசு	அரு. இராமநாதன்

3—வது வகுப்பு

முதற் பரிசு	மு. முத்தையா
2-வது பரிசு	உல. உமையாள்

4—வது வகுப்பு

முதற் பரிசு	*செ. சிதம்பரம்*
2-வது பரிசு	*செ. சிகப்பி*

5—வது வகுப்பு

முதற் பரிசு	*நா. அருணசலம்*
2-வது பரிசு	*பழ. சண்முகம்*

ஆண்டுவிழாத் தலைவர்கள்

முதலாவது ஆண்டுவிழா

9—3—1928

திருவாளர் பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள்
காந்தி நகர், அமராவதிபுதூர்.

இரண்டாவது ஆண்டுவிழா

29—2—1929

திருவாளர் சாண்டோ **L.** *சோமசுந்தரன் அவர்கள்*
கீழச்சிவல்பட்டி.

மூன்றாவது ஆண்டுவிழா

10—3—1930

திருவாளர் W. P. A. *சௌந்திரபாண்டியன்*
அவர்கள், **M. L. C.**
இராமநாதபுரம் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு
பட்டிவீரன்பட்டி.

நான்காவது ஆண்டுவிழா

22—3—1931

திருவாளர் N. *தியாகராஜ அய்யர்*
அவர்கள் **M. A. L. T.**
பிரின்ஸிபால், மகாராஜா காலேஜ்
புதுக்கோட்டை.

ஐந்தாவது ஆண்டு விழா
12—6—1932

திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

ஆறு, ஏழு, எட்டாவதாண்டுவிழா
26—5—1935

திருவாளர் V. சாரநாதன் அவர்கள் M. A. பிரின்ஸிபால் நேஷனல் காலேஜ் திருச்சிராப்பள்ளி.

ஒன்பதாவது ஆண்டுவிழா
3—6—1936

திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ***B.A. L. T.****, கல்வி அதிகாரி சென்னை.*

பத்தாவதாண்டு பரிசளிப்புவிழா
21—7—1937

திருவாளர் A. M. S. ராகவன் அவர்கள் ***B. A. L. T.*** *தலைமை ஆசிரியர், A. C. ஹைஸ்கூல் பள்ளத்தூர்.*

பதிஞேராவது ஆண்டு பரிசளிப்புவிழா
1—7—1938

திருவாளர் T. புருஷோத்தம் அவர்கள் முனிசிபல் கமிஷனர், காரைக்குடி.

பனிரண்டாவது ஆண்டுவிழா
2—7—1939

திருவாளர் R. P. சேதுப்பிள்ளை அவர்கள் ***B. A. B. L.*** *சென்னை பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சியாளர், சென்னை.*

பதின்மூன்ருவதாண்டு பரிசளிப்புவிழா
16—6—1940

திருவாளர் T. K. இராமபத்ர சர்மா அவர்கள் சென்னை.

பதினான்கு, பதினைந்தாவது ஆண்டுவிழா

9—6—1942

சுவாமி விபுலானந்தா **B. Sc.**

பதினாறுவதாண்டு பரிசளிப்புவிழா

21—5—1943

திருவாளர் P. R. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை
அவர்கள் M. A., பிரின்ஸிபால், கணேசர்
செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.

பதினேழாவதாண்டு பரிசளிப்புவிழா

20—5—1944

திருவாளர் R. இராமசாமி அய்யர் அவர்கள்
B. A. L. T. டெபுடி இன்ஸ்பெக்டர்
திருப்பத்தூர்.

பதினேட்டாவது ஆண்டுவிழா

2—6—1945

திருவாளர் சொ. முருகப்பா அவர்கள்
'குமரன்' ஆசிரியர், காரைக்குடி.

பத்தோன்பதாவது ஆண்டு பரிசளிப்புவிழா

26—5—1946

திருவாளர் S. இராகவாச்சாரி அவர்கள் **M. A. L. T.**
தலைமையாசிரியர் C. A. M. ஹைஸ்கூல்
கண்டனூர்.

இருபதாவதாண்டு பரிசளிப்பு விழா

30—5—1947

திருவாளர் V. K. கனகராஜ் அவர்கள் **B. A. L. T.**
டெபுடி இன்ஸ்பெக்டர், திருப்பத்தூர்.